# 13 மாணவர்களுக்கான வழிமுறைகள்: பணித்தாள்கள் 1+2

**இலக்கு**

ப.தா.1 மற்றும் ப.தா.2 ஆகிய இரு பணித்தாள்களும் மாணவர்களுக்கு நேரடியாகக் கொடுப்பதற்கு வடிவமைக்கப்பட்டன. அவை அவரவர்களுடைய எழுத்துருக்களை எழுதுவதற்கும் பயனுள்ள சிறுகுறிப்பு விவரங்கள் மற்றும் பரிந்துரைகளுடன் தம் துணைவேண்டா எழுத்தினை முன்னெடுக்கவும் துணைசெய்யும் நோக்குடையன. பணித்தாள்கள் கற்றல் உத்திகள் மற்றும் செயல்முறைகள் ஆகியவற்றுடன் நெருக்கமான தொடர்புடையன, அவை மாணவர்களுக்கு அவர்களுடைய வழக்கமான வகுப்பறைக் கற்பித்தலிலிருந்து பழக்கப்பட்டவை, அதன் விளைவாக பெரும்பகுதிக் கல்வியினையும் பாரம்பரியமொழிக்கற்பித்தலையும் நெருக்கமான இணைப்புக்குக் கொண்டுவருதற்குப் பங்களிக்கின்றன. இப்பணித்தாள்கள் #8 – 12 இல் வழங்கப்பட்டுள்ள கற்பித்தல் மதியுரைகளின் குறைநிரப்பிகளாகின்றன, ஆனால் அவை எவ்விதத்திலும் அவற்றுக்குப் பதிலாக அமைவனவல்ல.

**பொது அறிமுகம்:**

மொழித் தேர்ச்சி அடிப்படையில், இரண்டு பணித்தாள்களும் 4 ஆவது தரத்துக்கு மேலான மாணவர்களுக்குப் பொருத்தமாக அமையக்கூடியன. இளைய மாணவர்களுக்கு, முன்னரே மேலும் தெளிவுபடுத்தியவையும் விளங்கப்படுத்தியவையும் ஆன சில தெரிவுசெய்யப்பட்ட பகுதிகள் பரிந்துரைக்கப்படுகின்றன. தகுதிநிலையைப் பொறுத்து இது மூத்த மாணவர்களுக்கும், குறைந்தது தொடக்க வரிசையிலாயினும், (வரையறையுடைய சில குறிப்புகளையும் முன் விளக்கத்தையும் பொறுத்து) பொருந்துவதாகும். பணித்தாளை அறிமுகப்படுத்தும்போது, மிகத் தெளிவாக இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது. மாணவர்கள் உண்மையாக விளங்கி குறிப்பாகப் பயிற்சி செய்த ஒப்படைகள் மட்டுமே அவர்களுடைய துணைவேண்டா வேலைக்குத் துணைசெய்யும். பணித்தாள்களின் செயற்படுமுறைகள் பற்றிய அறிமுகம் செய்பவரின் விளக்கத்தைத் தொடர்ந்து, மாணவர்களுக்கு அவர்களுக்குரிய படியைக் கொடுக்கவேண்டும், அதனால் அவர்கள் வீட்டில் அவற்றுடன் வேலை செய்யலாம். ஒரே நேரத்தில் இரண்டு பிரதிகளையும் அவர்களுக்கு வழங்கக்கூடாதெனப் பரிந்துரைக்கப்படுகிறது. ஆனால் முறைகளைக் கற்கவும் பயிற்சி செய்யவும் மாணவர்களுக்கு நேரத்தை வழங்குதற்காக, தனித்தனியாக, 2 – 3 கிழமைகளுக்குப் பின்னர் வழங்கலாம்.
பணித்தாள்களில் சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டப்பட்ட பல கூறுகள், இந்நூலின் மற்றைய இயல்களில் (#8 – 12) மேலும் உறுதியான ஆழமான பரிந்துரைகள் மற்றும் பயிற்சிகளுடன் தொடரப்பட்டுள்ளன. இப் பரிந்துரைகளும் பயிற்சிகளும் ஏற்கெனவே வகுப்பில் விளக்கப்பட்டும், பயிற்சிசெய்யப்பட்டும் இருந்தால், பணித்தாள்களின் அறிமுகத்தையும் அவற்றை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுதலையும் இயல்பாகவே எளிதாக்கும்.

---

**பணித்தாள் 1 "எழுத்துருவைத் திட்டமிட கட்டமைக்க, உருவாக்க படிப்படியான வழிகாட்டி"**

உண்மையான எழுத்துப் பணிகளைப் பயன்படுத்தி, பணித்தாளின் ஆறு வேறுபட்ட வழிகளை ஒரு தடவைக்கு மேலாகப் பயன்படுத்துவது மிக நன்று. 1½ பக்கங்களில் ஓர் எழுத்துரு எழுதுக, அதன்பின் 5 – 10 மணித்துளி அது பற்றி எடுத்துரைப்பு வழங்குக.
ஆறு வழிகளையும் இலக்கியத்தில் அல்லது ஒரு கற்பனைத் தலைப்பிலிருந்து ஒரு பொருளினூடாக பயிற்சி செய்யவேண்டும் ("எம்முடைய நாட்டைப் பற்றி ஒரு கதையைக் கண்டுபிடிக்கப்போகிறோம்", "என் விடுப்புக்கால மிகவும் உணர்வூட்டும் துணிகரச் செயல்", "பொய்களின் கதை/பொய் பற்றிய கதை"). ஆறு வழிகளுள் ஒவ்வொன்றும் கலந்துரையாடப்பட்டு பயிற்சி செய்யப்படவேண்டும். இதற்கு நீண்ட நேரம் தேவைப்படலாம், ஆனால் மாணவர்கள் தம்முடைய எதிர்கால ஒப்படைகளுக்கு துணைசெய்யக்கூடிய மதிப்பான திறன்களை கற்றுக்கொள்வதால் இது மிகுந்த பயனுடையதாக மதிப்பானதாக அமைகின்றது.
முதலாவது சுற்றினை எளிமைப்படுத்தின், தடித்த எழுத்திலுள்ள ஆறு வழிகளின் தலைப்புகளையும் துணைத்தலைப்புகளையும் மட்டும் கலந்துரையாடுக. தொடர்ந்துவரும் குண்டுப்புள்ளிகள் பணித்தாளுடன் இரண்டாவது சுற்றுப் பயிற்சியின்போது மதிப்பிடலாம்.

### பணித்தாள் 2 "எழுதும்போது ஏற்படும் சிக்கல்களை எதிர்கொள்ளல்"

இந்தப் பணித்தாள் ப.தா.1 உடன் சேருவதாகக் கருதப்படுகிறது. பணித்தாளை மாணவர்களுக்குப் பகிர்வதன் முன், எழுதும்போது அவர்கள் எதிர்கொண்டிருக்கக்கூடிய சிக்கல்கள் எவை? அவற்றை அவர்கள் எவ்வாறு நன்றாக எதிர்கொண்டனர் என்பதை மீள்பார்வை செய்தல் ஒரு நல்ல எண்ணமாகும். பின்னர் பணித்தாள் 2 வாசிக்கப்பட்டு கலந்துரையாடப்படும். இங்குகூட, சில பரிந்துரைகளை உண்மையான எடுத்துக்காட்டுகளுடன் பயிற்சிசெய்து, அதன்பின்னர் மாணவர்களுடைய பட்டறிவுகளை அவர்களுடன் கலந்துரையாடுதல் ஒரு நல்ல எண்ணக்கருவாகும். இது கற்றலை ஆழமாக்குவதுடன் திடமாக்கி, பின்னர் பணித்தாள்களை முற்றாகவும் துணையின்றியும் பயன்படுத்துவதற்கு மாணவர்களின் திறனுக்குப் பங்களிக்கிறது.

II

# ப.தா.1 படிப்படியாக ஓர் எழுத்துருவைத் திட்டமிடலும், வடிவமைத்தலும், பதிப்பித்தலும்


மாணவர்களுக்குப் பணித்தாள்

## படிநிலை 1

**உங்கள் தலைப்புக்கு நல்ல கருத்துகளை அறிக**

செய்யக்கூடியன:


- ஒரு தாள் அல்லது பல சிறிய துண்டுகள் எடுக்கவும். தலைப்புத் தொடர்பாக மனத்தில் வருவதை எழுதுக. உங்களுக்கு எளிதாயிருப்பின் குறிப்புகளை உங்கள் பள்ளி மொழியில் எழுதலாம்.
- நேரமிருப்பின், தலைப்பினைப் பலருடன் கலந்துரையாடி, அவர்களுடைய எண்ணங்களை குறித்துவைக்கவும்.
- இம்முறைகளுடன் உங்களுக்கு ஏற்கெனவே பழக்கமிருப்பின், மன வரைபடம் ஒன்றினை உருவாக்குக, ˙.




## படிநிலை 2

**உங்கள் கருத்துகளை ஒழுங்குபடுத்துக, உங்கள் எழுத்துருவின் கட்டமைப்பினைத் திட்டமிடுக.**

- உங்கள் குறிப்புகளையும் தாள் துண்டுகளையும் பார்வையிடவும். உங்களால் பயன்படுத்த முடியாதவற்றை நீக்கிவிடவும்.
- ஒரு தாளினை எடுத்து அதனை மூன்று பகுதிகளாக மடிக்கவும்: முன்னுரை / கண்ணோட்டம் – பெரும்பகுதி (பெரும் பரப்பு) – முடிவு/சுருக்கம்
- பொருத்தமான பரப்பில் உங்கள் கருத்துகளை எழுதவும். எது விடப்பட்டு இருக்கலாம் என்பதை மனங்கொண்டு சேர்க்கவும்.
- உங்கள் எழுத்துரு / கதை ஓரளவு எதனை உள்ளடக்கும் என்பதை அறியும் வரையில் இப் படிநிலையில் தொடர்ந்து உழைக்கவும்.
- எழுத்துருவை எழுதுதல் பற்றியும் எண்ணுக (தாளில், சித்திர வடிவமாக, கணினியூடாக…)




## படிநிலை 3

**எழுத்துருவின் முதல் வரைபினை எழுதுக.**

- எழுத்துருவை எழுதுக.
- உங்கள் எழுத்துருவை வாசிக்கவும். கட்டமைப்புச் சரியா? நீங்கள் இதனை மேம்படுத்த ஏதும் சொற்களை, வடிவங்களை, வாக்கியங்களை மாற்ற விரும்புகிறீரா?

## படிநிலை 4

கவர்ச்சியான தலைப்பு ஒன்றினைக் கண்டு பிடிப்பதும் தொடக்கமும்

- நல்லதொரு தலைப்புடன் உங்கள் எழுத்துருவை வாசிப்பவர்கள் அல்லது கேட்பவர்களின் ஆர்வத்தை உங்களால தூண்டமுடியும். "என் விடுப்புக்கால வீரதீரம்" என்பதைவிட "காப்பாற்றுங்கள், நான் தாழ்கிறேன்!" என்பது மிகவும் உற்சாகமாக ஒலிக்கின்றது.
- எழுத்துருவின் முதலாவது வாக்கியம் அல்லது முதலாவது பந்திக்கும் அதுவே பொருந்தும், இங்கு நீங்கள் ஆர்வத்தையும் சூழ்ச்சியையும் உருவாக்கலாம். ஒரு கதையில், வியப்பையும் ஆர்வத்தையுமுடைய தொடக்கத்தால் இதனை விளைவிக்கலாம், உண்மை எழுத்துருக்களெனின், அது தெளிவான உண்மைத் தகவல்களை வேண்டிநிற்கும்.
- நீண்ட எழுத்துருக்களுடனும் எடுத்துரைப்புகளுடனும், தெளிவான தகவல்தரு துணைத்தலைப்புகளைப் பயன்படுத்துதல் இன்றியமையாததாகும். வாசகர் ஒரு கண்ணோட்டத்தைத் தக்கவைப்பதற்கு இது துணைசெய்யும்.

## படிநிலை 5

முதல் வரைபினை பதிப்பிக்கவும்

பலவகையில், "எழுத்து மாநாட்டில்" இணைகளாகவோ மூன்றுபேர் உள்ள குழுக்களாகவோ இது இடம் பெறலாம். இவ்வகையில் நீங்கள் ஒருவருக்கொருவர் துணைசெய்யவும் அறிவுறுத்தவும் முடியும். எனினும், எழுத்துருவை நீங்களே பதிப்பிக்கலாம். பின்வரும் வினாக்கள் உங்களுடைய பதிப்பு முயற்சிகளில் துணைசெய்யும்:

– ஒட்டுமொத்தமாக, என் எழுத்துரு ஆர்வமுடையதாகவும் விளங்கிக் கொள்ளத்தக்கதாகவும் உள்ளதா? அதை இன்னும் தெளிவாக ஆக்குதற்கு எனக்கு என்ன தேவை? எது நல்லது அல்லது அவ்வளவு நன்றாயில்லை? நான் தலைப்புக்குள் நின்றுகொண்டேனா?


– என் எழுத்துரு தெளிவான கட்டமைப்பையுடையதா? (முன்னுரை / கண்ணோட்டம், தலையாய உள்ளுடல், முடிவு / சுருக்கம்); ஒழுங்மைப்புத் தெளிவாயுள்ளதா? கருப்பொருளிலிருந்து விலகிப்போவதைத் தவிர்த்துள்ளேனா?

– என் எழுத்துருவின் தலைப்பினை இன்னும் ஆர்வமுடையதாகவும் உற்சாகமூட்டுவதாகவும் திரும்ப எழுதலாமா, அல்லது அதன் பொருள் பற்றி மிகத் தெளிவான தகவலை வழங்கலாமா?

– படிப்பவர் தொடர்ந்து படிக்கச் செய்வதான ஆர்வமான தகவலுடைய வாக்கியத்துடன் எழுத்துரு தொடங்குகிறதா, அல்லது அதை மேம்பாடடையச் செய்யலாமா?

– வாக்கியங்கள் விளங்கிக்கொள்ளத்தக்கனவா? இலக்கணப்படி சரியானவையா? (சொற் பயன்பாடு, சொற்றொடர், காலம்)? ஐயங்களை கோடிட்டு அவற்றை ஆசிரியருடன் அல்லது தெரிந்த வேறு ஒருவருடன் கலந்துரையாடுக.

– நான் தெளிவான, பொருத்தமான சொற்களை தெரிவுசெய்துள்ளேனா? ஒரே சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்தியுள்ளேனா? எழுத்துப்பிழை சரிபார்க்கப்பட்டதா? (அகரமுதலியில் பார்க்கவும்)




## படிநிலை 6

எழுத்துருவின் நிறைவு வரைபினை வடிவமைக்குக

- உங்கள் எழுத்துருபின் வடிவமைப்பு வாசகர்களை அல்லது கேட்பவர்களை ஈர்ப்பதை உறுதிசெய்யவும்!
- மேலும் புதிய வடிவங்களை சேர்த்துக்கொள்க (படங்கள், கணினியில் எழுதி, ஒலிவடிவம் (ஒலிவடிவகோப்பு) முதலியன)

# ப.தா.2 எழுதும்போது எழும் சிக்கல்களை எதிர்கொள்ளல்

மாணவர்களுக்குப் பணித்தாள்


எழுத்துருவினை எழுதும்போது அடிக்கடி ஏற்படும் சிக்கல்கள் சிலவற்றை நீங்கள் எப்படித் தீர்க்கலாம் என்பதை இப்பக்கம் காட்டுகிறது.

– உங்களுக்கு எதைப்பற்றி எழுதுவது என்று தெரியாதபோது அல்லது உங்கள் எழுத்துருவை திட்டமிடல் ஒழுங்கமைத்தல் தொடர்பாக உங்களுக்கு இடர்பாடுகள் இருப்பின், பணித்தாள் 1 இனை மீண்டும் பார்க்கவும்.



## சிக்கல் 1


**என் தாய் மொழியில் எழுதுவதில் எனக்கு இடர்பாடுகள் உள்ளது**



- உங்களுக்கு எளிதாக இருக்குமாயின், எண்ணங்களை ஒருங்குகூட்டி எழுத்துருவைத் திட்டமிடும்போது, உங்கள் பள்ளிமொழிச் (எ.கா. யேர்மன்) சொற்களையும் பயன்படுத்தலாம்.
- உங்கள் தாய்மொழியில் உமக்கு தோன்றுவதுபோல பேச்சுமொழி எழுத்துமொழி வசன அமைப்பில் ஏதோ ஒன்றை எழுதவும். பின்னர் உங்கள் வரைபினை ஆசிரியருடன் அல்லது மொழிப்புலமை உள்ள ஒருவரிடம் ஏன் அது மாற்றி எழுதப்படவேண்டும் என்பதை கலந்துரையாடவும்.
- நீர் சிறிய பந்தி ஒன்றை எழுத ஆசிரியருக்கு ஒப்புதல் அழிக்கலாம். முடிந்தவரை மிகச்சரியான எழுத்து வடிவில் அல்லது எ.கா முதல் ஐந்து வசனங்களை எழுத்து வடிவில் திருத்தி எழுதலாம்.
- நீங்கள் உங்கள் மொழியில் எழுத்துப்பிழையினை சரிபார்க்க கட்டாயமாக ஓர் அகரமுதலியினைப் பயன்படுத்தவும்.

## சிக்கல் 2

**என் எழுத்துருவுக்கு உற்சாகமான கவர்ச்சியுடைய ஒரு தொடக்கத்தினை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை**




- முதல் வாக்கியத்தை எழுதுதற்கு முன்னரே கவர்ச்சியான தலைப்பொன்றினை வைத்திருத்தல் இன்றியமையாததாகும். எடுத்துரைப்புகளும் நீண்ட எழுத்துருபுகளும் துணைத்தலைப்புகளுடன் கட்டமைக்கப்பட வேண்டும்.
- எழுத்துருபுகள் அல்லது எடுத்துரைப்புகளின் பொருள் பற்றிய சிறிய கண்ணோட்டம் ஆரம்பத்திலேயே அமையவேண்டும். இது படிப்பவர்கள் அல்லது கேட்பவர்கள் தங்களை நோக்குநிலைப்படுத்த துணைசெய்கிறது.
- பட்டுணர்வு பற்றிய ஒரு கதை அல்லது எடுத்துரைப்பும் கூட சிறிய கண்ணோட்டத்துடன் தொடங்கலாம்: "நான் எப்படி… என்று உங்களுக்கு ஒருமுறை நான் சொல்லப்போகிறேன்", "என்னுடைய கதை எதைப்பற்றியதெனின்"
- ஒரு கதை "இடைப்பகுதி" யிலிருந்தும் தொடங்கலாம், அது சிலவேளை விறுவிறுப்பாக அமையலாம்: "நான் நிலத்தில் இறந்தது போலக்கிடந்தேன். என்ன நடந்திருக்கலாம்? மெதுவாக, நான் நினைவுபடுத்தத் தொடங்கினேன்".
- படிப்பவரிடம் அல்லது கேட்பவரிடம் ஒரு வினாவைத் தொடுப்பதாக ஒரு கதையைத் தொடங்குவதும் ஒரு நல்ல வழியாக அமையலாம்.: "சென்ற கோடை காலத்தில் எனக்கு என்ன நடந்தது என்பதை நீங்கள் அறிய விருப்பமா? இதை ஒரு தடவை கேளுங்கள்! இது அன்று…".



## சிக்கல் 3


**நான் இனி என்ன எழுத வேண்டும், எப்படி எழுத வேண்டும் எனத் தெரியவில்லை**

- ஏற்கெனவே நீங்கள் எழுதியதை யாருக்காவது வாசித்துக்காட்டவும், அல்லது சொல்லவும். பின்னர் அந்த ஆளுடன் உங்கள் எழுத்துருவை எவ்வாறு தொடரலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுக.
- எழுத்துருபு அல்லது எடுத்துரைப்பு கருப்பொருளின் ஒரு புதிய விடயம், வேறுபட்ட அல்லது இதுவரை கையாளப்படாத புதிய துணைத் தலைப்புப் பற்றி எண்ணுக.
- ஒரு கதையை படிப்பவர்கள் எதனை விரிவாக அறிய விரும்புவார்கள் என்பதைச் சிந்திக்கவும், அடுத்து அது பற்றி ஏதாவது எழுதுக. ("அறிவன் கட்டிலில் படுத்து உறங்கிவிட்டான்" → "அறிவனுடைய கட்டில் அறை பற்றி நீங்கள் சிலவேளை அறிய விரும்பலாம் நான் உங்களுக்கு மகிழ்வுடன் சொல்கிறேன்…")
- ஒரு கதை "இடைப்பகுதி" "யிலிருந்தும் தொடங்கலாம், அது சிலவேளை உற்சாகமூட்டுவதாக அமையலாம்: "நான் நிலத்தில் இறந்ததுபோலக் கிடந்தேன். என்ன நடந்திருக்கலாம்? மெதுவாக, நான் நினைவுபடுத்தத் தொடங்கினேன்…"
- உங்கள் எழுத்துருவின் கடைசி வாக்கியத்தைப் படிக்குக. அந்த வாக்கியத்திலிருந்து ஒரு சொல்லினை அடிப்படையாகக் கொண்டு இன்னொரு வாக்கியம் எழுதுக. ("அறிவன் கட்டிலில் படுத்து உறங்கிவிட்டான்" → அவன் திடீரென விழித்து எழுந்து ஏதோ ஒன்று நினைவு வரும்வரை ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.



## சிக்கல் 4

**எனது எழுத்துருவுக்கு நல்ல முடிவுரையினை கண்டுபிடிக்க முடியவில்லை**



- உண்மையான எழுத்துருவினை எப்போதுமே ஒரு சிறிய சுருக்கத்துடன் முடிப்பது நல்ல கருத்தாகும். ("இத் தலைப்பின் மிக முக்கிய பண்புகள்….")
- அடிக்கடி, எழுத்துருவின் முடிவில் உங்களுடைய கருத்தினை வழங்குதல் நன்று. "இந்தக் கதை/தலைப்புப் பற்றி நான் விரும்புவது….", "என்னுடய கருத்தில்…"
- இயலுமாயின் படிப்பவர்களை நேரடியாக அணுகுவதும் நன்று. "நான் என்ன சொல்ல விரும்பினேன் என்பதை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொண்டீர்கள் என நான் நம்புகிறேன்." "இந்நிலையில் நீங்கள் எப்படி நடந்துகொள்வீர்கள்.?"

## சிக்கல் 5

**துணைசெய்யுங்கள், என் எழுத்துரு மிகச் சிறியதாயுள்ளது!**
(மேலேயுள்ள சிக்கல் 3யும் பார்க்க)

- கதைகளுக்கு: பெரும்பங்கு வகிக்கும் ஒரு புதிய கதைமாந்தரை (அதாவது, ஒரு குறும்புப் பூனை) உருவாக்குக.
- உங்கள் எழுத்துருவில் உள்ள சில வாக்கியங்களை கூடிய விவரங்களுடன் நீட்டுக., அல்லது மேலதிக வாக்கியம் ஒன்றை எழுதுக. (எடுத்துக்காட்டு: "அப்பொழுது நான் இன்னும் மிகச் சிறியவராக இருந்தேன்" → "அப்பொழுது, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நான் இன்னும் மிகச் சிறியவராக இருந்தேன். நான் ஆகக் கூடியது ஆறு வயதுடையவராக இருந்தேன், அப்பொழுதுதான் முன்பள்ளிக்குப் போகத் தொடங்கினேன்."
- கதையின் முடிவை விரிவாக்குக. உண்மை எழுத்துருவெனில், நீங்கள் நல்லதொரு சுருக்கத்தினை வழங்கலாம்; ஒரு கதையெனில் வாசகர்களுக்கு உங்கள் தனிப்பட்ட பார்வையை அல்லது கருத்தை வழங்கலாம்.

